## மெட்ரோ ரெயில் வழித்தடத்துக்காக

# நிலம் கொடுத்த பள்ளி நிர்வாகத்துக்கு, இழப்பீட்டு தொகை

சென்னை, பிப்.29-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் 2-ம் கட்டமாக 3, 4 மற்றும் 5-ம் வழித்தடங்களில் பணிகளை தொடங்க உள்ளது. இதற்காக நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. நில உரிமையாளர்களிடம், மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் அதிகாரிகள் நேரடி பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமாகவும் சுமுக உடன்பாடு ஏற்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

இதுபோன்ற நடவடிக்கையின் பயனாக மெட்ரோ ரெயில் திட்டத்தின் 3-வது வழித்தடத்துக்காக நுங்கம்பாக்கம் ஸ்டெர்லிங் சாலை, 'குட் ஷெப்பர்டு' பள்ளி நிர்வாகத்தினரிடம் இருந்து 17 ஆயிரத்து 495 சதுர அடி நிலம் பேச்சுவார்த்தை நடத்தியதால் கையகப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்த நிலத்துக்கு உரிய இழப்பீட்டுத் தொகைக்கான காசோலையை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் இயக்குனர் (இயக்கம் மற்றும் அமைப்புகள்) எல்.நரசிம் பிரசாத், பள்ளி நிர்வாகத்தினரிடம் வழங்கினார். அப்போது மாவட்ட வருவாய் அதிகாரிகள் கே.தர்ப்பகராஜ், என்.சத்தியநாராயணன், தலைமை பொதுமேலாளர் (மனிதவளம்) ஜி.ராஜரத்தினம் ஆகியோர் உடன் இருந்தனர்.

நீண்ட நிலம் கையகப்ப்டுத்தும் நடைமுறையை பின்பற்றுவதை விடவும், எளிய முறையில் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்துவதால் மெட்ரோ ரெயில் நிறுவனத்துக்கு நிலத்தை தருவதற்கு, நில உரிமையாளர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட தகவல் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.